தளர்வுகளுடன் பொதுமுடக்கம் அமல்: தேநீர் கடைகள் திறப்பு

சென்னை, ஜூன் 14: தமிழகத்தில் தளர்வுகளுடன் பொதுமுடக்கம் திங்கள்கிழமை அமல்படுத்தப்பட்டது. மாநிலம் முழுவதும்தேநீர் கடைகள் திறக்கப்பட்டன. அதுபோல் டாஸ்மாக் கடைகளில் கூட்டம் அலைமோதியது.

தமிழகத்தில் கரோனா இரண்டாவது அலை கடந்த ஏப்ரல் மாதம் முதல் வேகமாகப் பரவியது. கரோனா முதல் அலையைக் காட்டிலும், இரண்டாவது அலையில் பாதிப்பும், இறப்பும் அதிகளவில் உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு கடந்த மே 10-ஆம் தேதி முதல் முழு பொது முடக்கம் அமல்படுத்தியது. புதிய கட்டுப்பாடுகளுடன் முழு பொது முடக்கம் கடந்த 15-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டது.

கடந்த மே 18-ஆம் தேதி முதல் பயணிக்க இ-பதிவு கட்டாயமாக்கப்பட்டது. இருப்பினும் கரோனா பரவல் அதிகமாக இருந்ததினால், தளர்வற்ற முழு பொது முடக்கம் கடந்த 24-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டது. இதையடுத்து கரோனா பரவல் சில மாவட்டங்களை தவிர்த்து, பெரும்பாலான மாவட்டங்களில் குறையத் தொடங்கியது.

இதன் விளைவாக பொதுமுடக்கம் சில தளர்வுகளுடன் கடந்த 7-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டது. மேலும் கூடுதல் தளர்வுகளுடன் பொதுமுடக்கம் திங்கள்கிழமை முதல் அமல்படுத்தப்படுகிறது. புதிய தளர்வுகள் கோயம்புத்தூர், நீலகிரி, திருப்பூர், ஈரோடு, சேலம், கரூர், நாமக்கல், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் , மயிலாடுதுறை ஆகிய 11 மாவட்டங்களை தவிர்த்து 27 மாவட்டங்களில் அமலுக்கு வந்தது.

புதிய தளர்வுகளின் படி, தேநீர் கடைகள் திங்கள்கிழமை காலை 6 மணிக்கு திறக்கப்பட்டன. இதே போல அரசு பூங்காக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பூங்காக்கள், விளையாட்டு திடல்கள் காலை 6 மணி முதல் காலை 9 மணி முதல் திறக்கப்பட்டன. எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் பொருள்கள் விற்பனை செய்யும் கடைகள், ஸ்டேஷ்னரி கடைகள், வாகன உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் கடைகள், வாகனங்கள் பழுது நீக்கும் கடைகள் ஆகியவை திறக்கப்பட்டன. இந்தக் கடைகள் காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை திறந்திருந்தன.

பொதுமுடக்கத் தளர்வால் திங்கள்கிழமை திறக்கப்பட்ட தேநீர் கடை. இடம் கோடம்பாக்கம்.

இனிப்புக் கடைகளும் திறக்கப்பட்டன. இக் கடைகள் பிற்பகல் 2 மணி வரை மட்டும் திறக்கப்பட்டன. சலூன்கள், அழகுநிலையங்கள் அரசு உத்தரவின்படி 50 சதவீத வாடிக்கையாளர்களுடன் காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருந்தன.

மதுபானக் கடைகள்: 27 மாவட்டங்களிலும் டாஸ்மாக் மதுபானக் கடைகள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டன. 35 நாள்களுக்கு பின்னர் மதுபானக் கடைகள் திறக்கப்பட்டதால், கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

இதற்காக டாஸ்மாக் நிர்வாகம், காவல் துறையுடன் இணைந்து பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்திருந்தது. மதுபானக் கடைகள் முன்பு தடுப்புகள் அமைக்கப்பட்டு வாடிக்கையாளர்கள் தனி நபர் இடைவெளியுடன் வரிசையாக அனுமதிக்கப்பட்டனர். முகக்கவசம் அணிந்து வந்தவர்களுக்கு மட்டுமே மதுப் பாட்டில்கள் விற்கப்பட்டன.

மதுபானக்கடைகளில்கூட்டம் திரளுவதை தவிர்க்கும் வகையில், போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. சில கடைகளில் கூட்டம் இருந்ததினால், டோக்கன்கள் வழங்கப்பட்டன. இருப்பினும் சில கடைகளில் வாடிக்கையாளர்கள் கூட்டம் காணப்பட்டது. தனி நபர் இடைவெளியை பல கடைகளில் காண முடியவில்லை.

காவல்துறை பாதுகாப்பு: கூடுதல் தளர்வுகளுடன் திங்கள்கிழமை காலை 6 மணிக்கு அமலுக்கு வந்த பொதுமுடக்கத்தை அமல்படுத்தும் வகையில் காவல் துறை உஷார்படுத்தப்பட்டனர்.

இதையொட்டி மாநிலம் முழுவதும் சுமார் ஒரு லட்சம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் மார்க்கெட்டுகள், வணிக வீதிகள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட பகுதிகளில் கண்காணிப்பு மற்றும் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

இங்கு முகக்கவசம் அணியாதவர்கள், தனி நபர் இடைவெளியைப் பின்பற்றாதவர்கள் மீது வழக்குப் பதிவு செய்தனர். அதே போல வீட்டை விட்டு வெளியே தேவையின்றி வந்தவர்கள் மீதும் போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

முகக்கவசம்

நமது உயிர்க்கவசம்

☞ ஈரமான, கிழிந்த, அழுக்கான முகக்கவசங்கள் கூடவே கூடாது. துணிக்கவசமாக இருந்தால், அன்றன்றே துவைத்துவிடவேண்டும்.

தகவல்:
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்.

இணையவழி படிப்புகள்: தமிழகத்தில்11 கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி

विश्वविद्यालय अनुदान आयोग
UNIVERSITY GRANTS COMMISSION
बहादुरशाह ज़फ़र मार्ग
BAHADURSHAH ZAFAR MARG
नई दिल्ली / NEW DELHI-110002

சென்னை, ஜூன் 14: இணையவழி கல்வியை வழங்க தமிழகத்தில் 11 கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழு (யுஜிசி) அனுமதி வழங்கியுள்ளது.

2021-இல் இணையவழி கல்வி திட்டத்தின்கீழ் மாணவர் சேர்க்கை நடத்த தமிழகத்தின் 11 கல்வி நிறுவனங்கள் உள்பட 37 கல்வி நிறுவனங்களுக்கு யுஜிசி அனுமதி வழங்கி உள்ளது. அண்ணா பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம், எஸ் ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம், ஹிந்துஸ்தான் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம், டாக்டர் எம்ஜிஆர் கல்வியியல் ஆராய்ச்சி நிறுவனம், சத்யபாமா அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை தமிழகத்தில் உள்ளவை.

மன்னார்குடி, கொல்லம், கன்னியாகுமரி உள்பட 46 ரயில்களின் சேவை நேரம் மாற்றியமைப்பு

சென்னை, ஜூன் 14: சென்னை எழும்பூர்-மன்னார்குடி, கொல்லம், கன்னியாகுமரி உள்பட 46 ரயில்களின் சேவை நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பயணிகளின் வசதி, ரயில்களின் இயக்கத்தில் மாற்றம் உள்ளிட்டவற்றைக் கருத்தில் கொண்டு ரயில்களில் நேரத்தில் சில மாற்றம் செய்யப்பட்டுள்ளன. புறப்பாடு, வருகை மற்றும் இடையில் வரும் ரயில் நிலையங்களிலும் நேரம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

வரும் 17-ஆம் தேதி முதல் மன்னார்குடி-சென்னை எழும்பூர் ரயில் (06180) நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு இனி இரவு 10.53 மணிக்கு வந்தடையும். காரைக்கால்-எர்ணாகுளம் ரயில் (06187) நாகூருக்கு மாலை 4.48 மணிக்கும், திருவாரூருக்கு மாலை 5.30 மணிக்கும் வரும்.

வரும் 16-ஆம் தேதி முதல்புனலூர் - மதுரை சிறப்பு ரயில் (06730) மதுரை சந்திப்புக்கு அதிகாலை 5.35 மணிக்கு வந்தடையும். சென்னை எழும்பூர்-கொல்லம் சிறப்பு ரயில் (06101) மதுரைக்கு அதிகாலை 1.10 மணிக்கு வரும். கொல்லம்-சென்னை எழும்பூர் ரயில் (06102) மதுரைக்கு மாலை 6.40 மணிக்கு வரும். சென்னை எழும்பூர்-கன்னியாகுமரி சிறப்பு ரயில் (02633) திருநெல்வேலி சந்திப்பிக்கு காலை 3.55 மணிக்கு வரும்.

நாகர்கோவில்-கோயம்புத்தூர் (06321-06322), விழுப்புரம்-மதுரை (06867), நாகர்கோவில்-கோயம்புத்தூர் (02667), சென்னை எழும்பூர்-திருச்செந்தூர் (06105), சென்னை எழும்பூர்-புதுச்சேரி (06025-06026) உள்பட 46 சிறப்பு ரயில்களில் இடைப்பட்ட சில ரயில் நிலையங்களில் புறப்பாடு அல்லது வருகை நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலான ரயில்களில் சிறிய அளவில் மட்டுமே நேரம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை மாணவர் சேர்க்கை

சுழற்சி முறையில் ஆசிரியர்கள் பணிக்கு வர உத்தரவு

சென்னை, ஜூன் 14: கரோனா தொற்று தளர்வுகள் உள்ள 27 மாவட்டங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை நிகழ் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை நடத்த பள்ளிக்கல்வித் துறை ஆணையர் நந்தகுமார் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து பள்ளிகளுக்கு சுழற்சி முறையில் ஆசிரியர்கள் வருகை தர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு பள்ளிக் கல்வித்துறை ஆணையர் நந்தகுமார் அனுப்பியுள்ள சுற்றறிக்கை: 'கரோனா வைரஸ் தொற்று குறைந்து வரும் 27 மாவட்டங்களில உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 2021-22-ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை தொடர்பான பணிகளை அரசின் வழிகாட்டுதல் படி உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

11 மாவட்டங்களில் கரோனா தொற்று குறைவிற்கு பின்னர் மாணவர் சேர்க்கை நடத்த வேண்டும். தொடக்கப்பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரை மாணவர் சேர்க்கை தொடர்பான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள தலைமை ஆசிரியர்களுக்கு உதவியாக ஆசிரியர்கள் சுழற்சி முறையில் பள்ளிக்கு வருகை புரியவும், அந்த ஆசிரியர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதியினை அந்ததந்த மாவட்ட ஆட்சியர்களிடம் கேட்டு முதன்மைக்கல்வி அலுவலர்கள் ஏற்படுத்த வேண்டும்.

அனைத்து வகை பள்ளிகளிலும் 2021-22-ஆம் கல்வியாண்டில் ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரையில் அனைத்து வகுப்புகளுக்கும் கரோனா பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி மாணவர் சேர்க்கை நடத்திட வேண்டும். மேலும் மாணவர் சேர்க்கை விவரத்தை கல்வித் தகவல் மேலாண்மை முறைமை (எமிஸ்) இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.

பிளஸ் 2 மதிப்பெண் வழங்கும் குழுவில் மூன்று தலைமை ஆசிரியர்கள்

சென்னை, ஜூன் 14: பிளஸ் 2 வகுப்பு மாணவர்களுக்கான மதிப்பெண் வழங்குவது குறித்து ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட குழுவில் மூன்று தலைமையாசிரியர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் மாநில பாடத்திட்டத்தில் படித்த பிளஸ் 2 வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து அந்த மாணவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குவது குறித்து அரசுக்கு வழிகாட்டுதல் நெறிமுறைகளை வழங்குவதற்காகப் பள்ளிக் கல்வித்துறை, உயர் கல்வித்துறை, சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர், பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஆகியோரை கொண்ட குழு அமைக்கப்படும். அவர்கள் மாணவர்களுக்கு எவ்வாறு மதிப்பெண் வழங்குவது என்பது குறித்து ஆய்வு செய்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும், அதனடிப்படையில் பிளஸ் 2 வகுப்பு இறுதித் தேர்வு மதிப்பெண் வழங்கப்படும் என, முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

திருப்பூர், திருநெல்வேலி, சென்னை: இந்தக் குழுவில் தலைமை ஆசிரியர்கள் பிரிவில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளி, சுயநிதிப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் இடம்பெற்றுள்ளனர். இது குறித்த பள்ளிக்கல்வித் துறை ஆணையர் நந்தகுமார் இது தொடர்பாக வெளியிட்ட அறிவிப்பு: திருப்பூர் ஜெய்வாபாய் மாதிரி நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை ஸ்டெல்லா அமலோற்பவமேரி, திருநெல்வேலி சங்கர் உதவி பெறும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் கணேசன், சென்னை ஆழ்வார் திருநகர் செயின்ட் ஜான்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் ஜேம்ஸ் சத்தியராஜ் ஆகியோர் பிளஸ் 2 வகுப்புக்கு இறுதி மதிப்பெண்கள் வழங்குவது சார்ந்து அமைக்கப்பட்ட குழுவுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட தலைமையாசிரியர்கள் பிளஸ் 2 வகுப்பு மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்குவது குறித்து ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் தெரிவித்து, குழுவின் தலைவரால் வழங்கப்படும் பணிகளை உடனுக்குடன் மேற்கொண்டு ஆலோசனைக் கூட்டங்களில் தங்களின் கருத்துகளை வழங்க வேண்டும்.

வங்கியாளர் குழும உத்தரவைப் பின்பற்ற உத்தரவிட வேண்டும்

அரசுக்கு வங்கியாளர்கள் கோரிக்கை

சென்னை, ஜூன் 14: மூன்றில் ஒரு பங்கு ஊழியர்கள் மட்டும் பணிக்கு வர வங்கியாளர் குழுமம் தெரிவித்துள்ளநிலையில், அனைத்து ஊழியர்களையும் பணிக்கு வர வங்கி நிர்வாகங்கள் கட்டாயப்படுத்துகின்றன. எனவே, வங்கியாளர் குழும உத்தரவை தீவிரமாகப் பின்பற்ற, அனைத்து வங்கி நிர்வாகங்களுக்கும் அரசு உத்தரவிட வேண்டும் என்று வங்கியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில் தளர்வுகளுடன் கூடிய பொதுமுடக்கம் ஜூன் 21-ஆம்தேதி காலை வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதை தொடர்ந்து, வங்கிகளில் வேலை நேரம் வழக்கம் போல இருக்கும் என்றும், மூன்றில் ஒரு பங்கு ஊழியர்கள் மாற்று முறையில் செயல்படவேண்டும் என்றும் மாநில வங்கியாளர்கள் குழுமம் தெரிவித்துள்ளது.

ஆனால், வங்கியில் அனைத்து ஊழியர்களும் பணிக்கு வரவேண்டும் என்று வங்கி நிர்வாகங்கள் கட்டாயப்படுத்துகின்றன. இதனால், வங்கி ஊழியர்கள், அதிகாரிகள் மத்தியில் கரோனா பயம் அதிகரித்துள்ளது.

இது குறித்து, வங்கி அதிகாரிகள் கூறியது:

வங்கி கிளைகளின் வேலை நேரம் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை செயல்படும். வங்கிப் பரிவர்த்தனை நேரம் ஏற்கெனவே அறிவித்தது போல, பிற்பகல் 2 மணி வரை செயல்படும்.

கிளைகளில், மூன்றில் ஒரு பங்கு ஊழியர்கள், மாற்று முறையில் செயல்படவேண்டும் என்று மாநில வங்கியாளர் குழுமம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. ஆனால், சில தேசிய வங்கிகளின் உயர் அதிகாரிகள், கிளைகளில் உள்ள அனைத்து ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளை, தினமும் வேலைக்கு வருமாறு வற்புறுத்துகின்றனர். கிளைகளில் நிறைய பணிகளில் நிலுவையில் இருக்கின்றன. கணக்கு தணிக்கை நடைபெற இருப்பதால், அனைத்து பணிகளையும் முடிக்க வேண்டும் எனக் கூறி, வங்கிக்கு வர வற்புறுத்துகின்றனர்.

வங்கியில் பணியாற்றும் பலருக்கு ஏற்கெனவே கரோனா நோய்த்தொற்று தாக்கியுள்ளது. பலர் இறந்துள்ளனர். தற்போது அனைவரையும் வரச் சொல்வதால், கரோனா பயம் அதிகரித்துள்ளது. எனவே, வங்கியாளர் குழும உத்தரவை தீவிரமாகப் பின்பற்ற, அனைத்து வங்கி நிர்வாகங்களுக்கும் அரசு உத்தரவிட வேண்டும் என்றனர்.

பராமரிப்புப் பணி: சென்னை-நாகர்கோவில் ரயில் சேவையில் மாற்றம்

சென்னை, ஜூன் 14: சென்னை எழும்பூர்-விழுப்புரம் மார்க்கத்தில் எழும்பூர் ஜிஎஸ்என் யார்டில் ரயில்வே பராமரிப்புப் பணி ஜூன் 30-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளதால், சென்னை எழும்பூர்-நாகர்கோவில் சிறப்பு ரயில் சேவையில் மாற்றம் செய்யப்படவுள்ளது.

அதன்விவரம்: சென்னை எழும்பூர்-நாகர்கோவிலுக்கு ஜூன் 17, 24 ஆகிய தேதிகளில் மாலை 6.55 மணிக்கு இயக்கப்படும் சிறப்பு ரயில் (06063) சென்னை எழும்பூர்-தாம்பரம் இடையே பகுதி ரத்து செய்யப்படவுள்ளது. இந்த ரயில் தாம்பரத்தில் இருந்து இரவு 7.25 மணிக்கு புறப்படும்.

நாகர்கோவில்-சென்னை எழும்பூருக்கு ஜூன் 18, 25 ஆகிய தேதிகளில் மாலை 4.15 மணிக்கு இயக்கப்படும் சிறப்பு ரயில் (06064) தாம்பரம்-சென்னை எழும்பூர் இடையே பகுதி ரத்து செய்யப்படவுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்
(இந்திய மற்றும் தமிழ்நாடு அரசுகளின் கூட்டு நிறுவனம்)
நிர்வாக அலுவலகம், சி.எம்.ஆர்.எல். பணிமனை,
பூந்தமல்லி நெடுஞ்சாலை, கோயம்பேடு, சென்னை - 600 107.

திருத்த அறிவிக்கை

ந.க.எண்.நி.எ/ 002/2018 நாள்: 12.06.2021

திருத்த அறிவிப்பு

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், வழித்தடம் 4, இரண்டாம் கட்டம், திட்டம் தொடர்பாக நிலஎடுப்பு செய்ய 1997ஆம் ஆண்டின் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலஎடுப்புச் சட்டம் (சட்டம் 10/1999) பிரிவு 3(2)-ன்கீழ், படிவம் 'பி' -ல் வெளியிடப்பட்ட விபர அட்டவணைகளுக்கு கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகின்றது.

EX-34 & 36 வழித்தடம் பூந்தமல்லி பேருந்து நிறுத்தம்
பிரசுரிக்கப்பட்ட நாளிதழ் 'தினத்தந்தி' பிரசுரிக்கப்பட்ட நாள் 27.01.2020

அட்டவணை				அட்டவணை			
தற்போது உள்ளவை				திருத்திப் படிக்கவேண்டியவை			
பிளாக் எண்.	நகர புல எண்.	விபரம்	நிலஎடுப்பு விஸ்தீரணம் (ச.மீ.)	பிளாக் எண்.	நகர புல எண்.	விபரம்	நிலஎடுப்பு விஸ்தீரணம் (ச.மீ.)
பூந்தமல்லி கிராமம் மற்றும் வட்டம்							
-	1323/7A1	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	8	-	1323/7A1	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	32
-	1323/7B	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	5	-	1323/7B	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	8
-	1323/9	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	5	-	1323/9	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	9
-	1325/3	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	17	-	1325/3	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	46
-	1325/7	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	40	-	1325/7	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	88
-	1325/8	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	12	-	1325/8	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	57
-	1325/9	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	4	-	1325/9	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	8
-	1325/10	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	13	-	1325/10	ரயத்துவாரி புஞ்சை - வணிக கட்டிடம்	57
-	289/7A	ரயத்துவாரி புஞ்சை - காலிமனை	22	-	289/7A	ரயத்துவாரி புஞ்சை - காலிமனை	29

மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ),
சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்,
கோயம்பேடு, சென்னை-600 107.

செ.ம.தொ.இ/149 /நிலம் கையகம்/ 2021

திருப்பெரும்பூதூர் சிறப்புநிலை பேரூராட்சி
காஞ்சிபுரம் மாவட்டம்

ந.க.எண்.451/2021/அ1 குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை நாள்:11.06.2021

திருப்பெரும்பூதூர் பேரூராட்சியில் 01.08.2021 முதல் 31.07.2022 வரை ஒரு வருட காலத்திற்கான கீழ்கண்ட இனத்திற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 24.06.2021 தேதி வியாழக்கிழமை மாலை 3.00 மணி வரையில் வரவேற்கப்படுகிறது. மேற்கண்ட நாளில் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் 24.06.2021 வியாழக்கிழமை அன்று மாலை 3.30 மணிக்கு வருகைபுரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் திறக்கப்படும். டேவணித் தொகை செலுத்தாமல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இவ்வலுவலகத்தில் 23.06.2021 தேதியில் பிற்பகல் 03.30 மணிவரை உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

வ.எண்	ஒப்பந்தப்புள்ளிக்கான பணி விவரம்	செலுத்த வேண்டிய டேவணித் தொகை ரூ.	ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விவரம் ரூ.
1	திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வார்டு எண்.1 முதல் 15 வரையிலான வீடுகளில் வீடு வீடாக மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம்பிரித்து வாங்குதல், வளம் மீட்பு பூங்காவிற்கு கொண்டு சென்று எருவாக்குதல், மண்புழு உரம் தயாரித்தல், மறு சுழற்சி பொருட்கள் சேமித்தல் மற்றும் இதன் தொடர்பான இதர பணிகளை மேற்கொள்ளுதல்.	25,000/-	1680/-

செயல் அலுவலர்,
சிறப்புநிலை பேரூராட்சி, திருப்பெரும்பூதூர்

வெ.ஆ.எண்.35/செ.ம.தொ.அ/2021, நாள்.14.6.2021

इंडियन बैंक Indian Bank
इलाहाबाद ALLAHABAD
கார்ப்பொரேட் அலுவலகம்
254-260, அவ்வை சண்முகம் சாலை
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

அறிவிப்பு

காணொலிக் காட்சியமைப்பு (VC) அல்லது பிற ஒலி-ஒளிக் காட்சியமைப்பு (OAVM) மூலம் 15வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் (e-AGM)

இந்தியன் வங்கியின் 15வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் **ஜூலை 16, 2021, வெள்ளிக்கிழமையன்று காலை 11.00 மணிக்கு** காணொலிக் காட்சியமைப்பு (VC) அல்லது பிற ஒலி-ஒளிக் காட்சியமைப்பு (OAVM) மூலமாக (e-AGM) கூட்ட அறிவிப்பில் இடம் பெறுகின்ற அலுவல்களை நடத்துவதற்கு நடைபெறுகிறது.

எண்.254-260, சென்னை - 600014ல் உள்ள வங்கியின் கார்ப்பரேட் அலுவலகம் கூட்டத்தின் நிகழ்விடமாக இருக்கும்.

e-AGM அறிவிப்பின் மின்னணு பிரதிகள் மற்றும் நிதியாண்டு 2020-21க்கான வருடாந்திர அறிக்கை 18 ஜூன் 2021 அன்று அலுவலக நேரம் முடிவதற்குள் தமது மின்னணு முகவரியை வங்கியின் பங்குதாரர் ஆவணங்கள் / டெபாசிட்டரி பங்கேற்பாளர்(கள்)-ஆவணங்களில் பதிவு செய்து வைத்துள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் அனுப்பப்படும். டிமெட்டீரியலைஸ்டு முறையில் பங்குகளை வைத்துள்ள மற்றும் தமது மின்னணு முகவரியை பதிவு செய்யாத பங்குதாரர்கள், தமது மின்னணு முகவரியையும் மொபைல் எண்ணையும் தமது டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் மூலம் டெபாசிட்டரிகளில் பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் தமது கையிருப்பு பங்குகளை டிமேட் செய்ய / தமது மின்னணு முகவரியையும் மொபைல் எண்ணையும் வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவரான கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிட்., யூனிட்: இந்தியன் வங்கி, சுப்பிரமணியன் பில்டிங், 5ஆம் தளம், எண்.1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை - 600002 அவர்களுக்கு investor@cameoindia.com என்ற மின்னணு முகவரிக்கு அனுப்பிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் கூட்டத்தின் அறிவிப்பை மின்னஞ்சல் மூலமாக பெற்றுக்கொள்ள விரும்பினால், https://investors.cameoindia.com என்ற லிங்கில் கிளிக் செய்து தமது மின்னணு முகவரியை அதில் தற்காலிகமாக பதிவு செய்துகொள்ளலாம். இந்த e-AGM அறிவிப்பு மற்றும் 2020-21க்கான வருடாந்திர அறிக்கை வங்கியின் இணையதளமான www.indianbank.in மற்றும் NSE & BSE பங்கு சந்தைகளின் இணையதளங்களான www.nseindia.com & www.bseindia.com ஆகியவற்றிலும் கிடைக்க வழி செய்யப்படும்.

இந்த e-AGM கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் பங்குதாரர்கள் தொலைவிலிருந்து மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்க வாய்ப்பு அளிக்கப்படும். டிமெட்டீரியலைஸ்டு முறை மற்றும் காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள், தமது மின்னணு முகவரியை பதிவு செய்யாத பங்குதாரர்கள் ஆகியோருக்கு, தொலைவிலிருந்து வாக்களிக்கும் முறை குறித்து e-AGM கூட்ட அறிவிப்பில் தகவல் வழங்கப்படும். இந்த விவரங்களை வங்கியின் இணையதளத்திலும் பெறலாம். இதைப்போன்ற விவரங்களைப் பெற பங்குதாரர்கள் www.indianbank.in இணையதளத்தை பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த e-AGM கூட்ட அறிவிப்பு மற்றும் நிதியாண்டு 2020-21க்கான வருடாந்திர அறிக்கையின் காகித பிரதிகளை பங்குதாரர்களுக்கு வங்கி அனுப்பாது என்பதை கவனத்தில் கொள்ளுமாறு பங்குதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்தியன் வங்கிக்காக

தேதி : 14-06-2021
இடம் : சென்னை

தினா நாத் குமார்
துணை பொது மேலாளர் & கம்பெனி செக்ரட்டரி

வெள்ளிதோறும் தினமணியுடன்...
வெள்ளி மணி

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
www.iob.in
மத்திய அலுவலகம்: 763, அண்ணாசாலை, சென்னை 600 002

31.03.2021 வரை முடிந்த ஆண்டின் / காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை முடிவுகள்

(ரூ. இலட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	31.03.2021ல் முடிந்த காலாண்டு தணிக்கை செய்யப்பட்டது	31.03.2021 வரை முடிந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்டது	31.03.2020ல் முடிந்த காலாண்டு தணிக்கை செய்யப்பட்டது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த (நிகர) வருமானம்	6,07,380	22,52,455	5,48,408
2	இக்காலத்திற்கான நிகர லாபம்/(நட்டம்)(வரி விதிப்பிற்கு முன் மற்றும் / அல்லது அசாதாரண இனங்கள்)	34,365	83,971	8,348
3	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் / (நட்டம்) (விலக்கிற்கு பிறகு மற்றும் / அல்லது அசாதாரண இனங்கள்)	34,365	83,971	13,679
4	இக்காலத்திற்கான வரிக்கு பிறகு நிகர லாபம் / (நட்டம்) (விலக்கிற்கு பிறகு மற்றும் / அல்லது அசாதாரண இனங்கள்)	34,977	83,147	14,379
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் / (நட்டம்) (விலக்கிற்கு பிறகு மற்றும் /அல்லது விரிவான மொத்த வருமானம்) [(வரிக்கு பிறகு) காலத்திற்கான (உள்ளடக்கிய லாபம் / (நட்டம்) மற்றும் (வரிக்கு பிறகு) ஒருங்கிணைந்த வருமானம்]	NA	NA	NA
6	பங்கு மூலதனம்	16,43,699	16,43,699	16,43,699
7	முந்தைய ஆண்டின் இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி இருப்புக்கள் (மறுமதிப்பீட்டு இருப்பு தவிர)		(1,71,264)	
8	பங்கு ஒன்றிற்கான வருவாய் (ஒவ்வொன்றிற்கும் ரூ.10/-) (அசாதாரண இனங்களுக்கு முன் மற்றும் பின்)			
	1. அடிப்படை	0.21	0.51	0.08
	2. குன்றிய	0.21	0.51	0.10

குறிப்பு :
1. மேலே குறிப்பிடப்பட்டவை செபி (LODR) ஒழுங்குமுறைகள், 2015 இன் ஒழுங்குமுறை 33 இன் கீழ் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு / ஆண்டு நிதி முடிவுகளின் சுருக்கமான அறிக்கையாகும். தணிக்கை செய்யப்பட்ட காலாண்டு / ஆண்டு நிதி முடிவுகள் பங்குச் சந்தை(களின்) வலைத்தளங்களான : www.bseindia.com / www.nseindia.com மற்றும் வங்கியின் வலைத்தளமான www.iob.in இல் காணலாம். 2. புதிய கணக்கியல் தரநிலைகள் (Ind AS) தற்போது இந்தியாவில் உள்ள வங்கிகளுக்கு பொருந்தாது.

இடம் : சென்னை (S.ஸ்ரீமதி) செயல் இயக்குனர் (அஜய் குமார் ஸ்ரீவஸ்தவா) செயல் இயக்குனர் (பார்த்தா பிரதிம் செங்குப்தா) நிர்வாக இயக்குனர் மற்றும் CEO
தேதி : 14.06.2021

எடெல்வெய்ஸ் அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கோ. லிமிட்டெட்
Edelweiss Ideas create, values protect
CIN-U67100MH2007PLC174759
பதிவு அலுவலகம்: எடெல்வெய்ஸ் ஹவுஸ், C.S.T சாலை பிரிவு, கலினா, மும்பை-400098.
தொ பே: +91 22 4088 6090 / 6620 3149
கிளை அலுவலகம்: UGF -1, மெர்கன்டைல் ஹவுஸ், 15 கஸ்தூர்பா காந்தி மார்க்,
புது தில்லி -110001. www.edelweissarc.in

பிற்சேர்க்கை- IV-A
[பார்க்க விதி 9(1)]

E-ஏல விற்பனை அறிவிப்பு அசையா சொத்துகளின் விற்பனை

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதி 9(1) ஷரத்துகள் படி கடனுக்கு ஈடான அசையா சொத்துகளின் விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு
இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள நிறுவனத்திடம் பிணை / அடமானம் / ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கே விவரிக்கப்பட்டிருக்கும் அசையா சொத்துகள் பாரத ஸ்டேட் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் அவர்களால் அடையாள சுவாதீனத்தில் (Symbolic Possession) எடுக்கப்பட்டு பின்னர் EARC டிரஸ்ட்-SC125 (EARC)-ன் டிரஸ்ட்டி என்றளவில் செயல்படும் எடெல்வெய்ஸ் அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கம்பெனி லிமிட்டெட் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்துகள் M/s.உத்தரகாளியம்மன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (நொடித்த நிலையில்), திரு. மணிகண்டராஜு, திருமதி. T அருள்மொழி, திரு. S கிருஷ்ணராஜ், திரு D பிரபாகர், திருமதி P சித்ரா தேவி, திரு.G கதிர்வேல் மற்றும் திரு. K நவீன் குமார் ("நேரடி ஜாமீன்தாரர்கள்") ஆகியோரிடமிருந்து ஈடு பெற்று கடன் வழங்கிய EARC-க்குச் செலுத்தவேண்டிய 21 ஜனவரி 2019 அன்றுள்ளபடியான கடன் பாக்கி ரூ.221,84,82,388/- (ரூபாய் இருநூற்று இருபத்தோரு கோடியே எண்பத்து நான்கு லட்சத்து எண்பத்திரண்டாயிரத்து முந்நூற்று எண்பத்தெட்டு மட்டும்) மற்றும் அதன் மீதான வட்டி மற்றும் இதர செலவுகள் கட்டணங்கள் ஆகியவற்றை சேர்த்து வசூலிப்பதற்காக "உள்ளது உள்ளவாறு உள்ள இடத்தில் உள்ளவாறு உள்ளதெல்லாம் உள்ளவாறு" எனும் அடிப்படையில் 01 ஜூலை 2021 அன்று E-ஏல ஏஜென்சியான, M/s e-Procurement Technologies Limited (Auction Tiger), இணையதளம் https://edelweissarc.auctiontiger.net வாயிலாக E-ஏலம் மூலம் விற்கப்பட உள்ளன.

சொத்து விவரம்
நிலம் மற்றும் RCC தளமிட்ட வணிக கட்டிடம் (கண்ணன் டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸ் பயன்படுத்தி வருவது) (பரப்பளவு:28.07 சென்ட்) மற்றும் அதில் உள்ள கட்டிடம் சுமார் பரப்பளவு 43067 சதுர அடி. கதவு எண் 69, 70, 70/1 வண்ணாந்துறை சாலை, T.S.No.176,191, T.S வார்டு எண் 6, பொள்ளாச்சி டவுன், நகராட்சி, பொள்ளாச்சி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், திரு மணிகண்டராஜு ("நேரடி ஜாமீன்தாரர்") பெயரில் உள்ளது.

சொத்துக்கான ரிசர்வ் விலை மற்றும் EMD தொகை பின்வருமாறு:

ரிசர்வ் விலை	EMD தொகை
ரூ.10,27,00,000/- (ரூபாய் பத்து கோடி இருபத்து ஏழு லட்சம் மட்டும்)	ரூ.1,02,70,000/- (ரூபாய் ஒரு கோடியே இரண்டு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)

விரிவான E-ஏல விற்பனை விதிமுறை நிபந்தனைகளுக்கு இந்நிறுவனத்தின் இணையதளம் பார்க்க www.edelweissarc.in/Propertysale

ஓம்/-
தேதி: 15 ஜூன் 2021 அதிகாரபூர்வ அலுவலர்
இடம்: மும்பை தொலை பேசி: 7400057249 / 9930235957